2025 – நவம்பர் மாதம் – 06 ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 344/2023*

*2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | PW 2, சீனித்துரை |
| தந்தையார் பெயர் | : | தவசிக்கண்ணு |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | பதிவறை எழுத்தர், அரசு மருத்துவமனை, பெரம்பலூர். |
| வயது | : | 50 |

**தேதி: 06.11.2025.**

**முதல் விசாரணை:–**

நான் தற்பொழுது பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ சிகிச்சை குறித்த குறிப்பேடு ஆகியவற்றின் உண்மை நகல்களைத் தாக்கல் செய்கிறேன். மேற்படி மனுதாரர் சொந்த விருப்பத்தின்பேரில் சென்றுவிட்டதால் விடுவிப்பு அறிக்கை வழங்கப்படவில்லை. விபத்து பதிவேட்டின் உண்மை நகல் **மூ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவ சிகிச்சை குறிப்பேட்டின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2-ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

போலீசாரின் வேண்டுகோளின்படி காயச்சான்றிதழ் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த வழக்கில் போலீசார் காயச்சான்றிதழ் கோரவில்லை. மனுதாரருக்கு சி.டி.ஸ்கேன் எடுத்ததற்கான ஆவணங்கள் கொண்டு வரவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை:- இல்லை.</u>**

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**